**செய்தி வெளியீடு எண்: 784** **நாள்: 18.11.2017**

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே.பழனிசாமி அவர்கள் இன்று (18.11.2017) சிவகங்கையில் நடைபெற்ற பாரத ரத்னா புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்களின் நூற்றாண்டு விழாவில் ஆற்றிய உரை**

பாரதி கண்ட புதுமைப் பெண்!
தாள் பதிக்கும் இடமெல்லாம் தடம் பதித்த தாய்!
தனித்து நின்று களம் கண்ட புறநானூற்று காவியம்!
வீரத்தின் விளைநிலம்!
வெற்றியின் பிறப்பிடம்!
கழகத்தை காக்கும் காவல் தெய்வம் !
ஏழைகளின் இதய தெய்வம் !
பொன்மனச் செல்வி !
இதய தெய்வம் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களை
வணங்குகிறேன்.

மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் நூற்றாண்டு விழாவில்
கலந்து கொண்டு உங்களையெல்லாம் சந்திப்பதில்
பெரு மகிழ்ச்சியும், பெருமையும் அடைகிறேன்.

மாண்புமிகு துணை முதலமைச்சர்
திரு.**ஓ. பன்னீர்செல்வம்** அவர்களே!
சிறப்புரை ஆற்றிய மாண்புமிகு மக்களவை துணைத்தலைவர்
டாக்டர் **மு. தம்பி துரை** அவர்களே!

மாண்புமிகு கதர் மற்றும்
கிராமத் தொழில்கள் துறை அமைச்சர்
திரு. **க.பாஸ்கரன்** அவர்களே!

வரவேற்புரையாற்றிய தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அரசுச் செயலாளர்
திரு.**இரா. வெங்கடேசன்** அவர்களே!
சிவகங்கை நாடாளுமன்ற உறுப்பினர்
திரு. **பி.ஆர். செந்தில்நாதன்** அவர்களே!

மாண்புமிகு அமைச்சர் பெருமக்களே,

மாண்புமிகு சட்டப்பேரவைத் துணைத்தலைவர்
திரு.**பொள்ளாச்சி ஜெயராமன்** அவர்களே!

அரசு தலைமைக் கொறடா
திரு. **எஸ்.இராஜேந்திரன்** அவர்களே!

தமிழ்நாடு அரசின் புதுடெல்லி சிறப்பு பிரதிநிதி
திரு. **என். தளவாய் சுந்தரம்** அவர்களே!

தமிழ்நாடு பாடநூல் மற்றும்
கல்வியியல் பணிகள் கழக தலைவர்
திருமதி **பா.வளர்மதி** அவர்களே!

தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத் தலைவர்
திரு. **பி.கே.வைரமுத்து** அவர்களே!

நன்றியுரை ஆற்ற உள்ள
சிவகங்கை மாவட்ட ஆட்சித்தலைவர்
திருமதி. **க.லதா** அவர்களே!

வருகை தந்துள்ள நாடாளுமன்ற உறுப்பினர்களே,
வருகை தந்துள்ள சட்டமன்ற உறுப்பினர்களே,

தலைமைக் கழக நிர்வாகிகளே,
முன்னாள் அமைச்சர் பெருமக்களே!

முன்னாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களே!
கூட்டுறவு அமைப்புகளின் பிரதிநிதிகளே!
முன்னாள் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகளே!
கழகத்தின் விழுதுகளாக இருக்கின்ற
கழகக் கண்மணிகளே! அரசு அலுவலர்களே!
வணக்கத்திற்குரிய பெரியோர்களே! தாய்மார்களே!
இளைஞர்களே! நலத் திட்டப் பயனாளிகளே!

பத்திரிகை மற்றும் ஊடகத் துறை நண்பர்களே!
உங்கள் அனைவருக்கும் முதற்கண்

எனது வணக்கத்தை தெரிவித்துக்கொள்கிறேன்.

**"தென்பாண்டி நாட்டினிலே சேதுபதி பூமியிலே**
**பொன்பூத்த சீமை இது! புகழ் பாடும் சீமை இது!"**
என்ற சிவகங்கை மண்ணின் மைந்தர்
கவியரசர் கண்ணதாசனின் பாடல்
வரிகளுக்கு ஏற்றாற்போல்,

வீர வரலாறுகளை நினைவுபடுத்தும்
சிவகங்கை சமஸ்தானமும்,

இலக்கிய செழுமையிலும், கலை வளத்திலும் பெரும்பங்கு வகிக்கும் தமிழ் அறிஞர்களின் பட்டியலும்,

கலை நேர்த்தியும், கம்பீரமும் கொண்ட அரண்மனைகளைப் போன்ற செட்டி நாடு வீடுகளும் –
ருசியான செட்டிநாடு உணவு வகைகளும்,
பதார்த்தங்களும்

ஆன்மிக மணம் கமழும்
பழமையான திருக்கோயில்களும்,
சிவகங்கையை உலகப்புகழ் பெற
வைத்திருக்கின்றன.

சிவகங்கையின் முதல் மன்னரான
சசிவர்ணப் பெரிய உடையத்தேவர்
இராமநாதபுரம் பவானி சங்கர சேதுபதியை வென்று 27.1.1730 –ல் இந்த சிவகங்கை நகரை உருவாக்கினார்.

அப்போது இங்கிருந்த **சிவகங்கை என்னும்**
**நீர் ஊற்றை தெப்பக்குளமாக விரிவுபடுத்தி,**
அதன் அருகில் பெரிய அரண்மனையை கட்டினார்.
**சிவகங்கை** என்ற அந்த நீர் ஊற்றின் பெயரையே நகருக்கும் சூட்டினார்.

சிவகங்கை சீமை, நீண்ட நெடிய வரலாற்று பின்னணியைக் கொண்டது.

சிவகங்கை சீமையின் இரண்டாவது மன்னராக முடிசூடிக் கொண்ட முத்து வடுகநாத தேவர் வீரமங்கை வேலுநாச்சியாரை மணம் முடிக்கிறார்.

ஆங்கிலேயர்களுடன் நடந்த போரில் முத்து வடுக நாத தேவர் கொல்லப்பட்டார். சிவகங்கை ஆங்கிலேயர்களின் ஆளுகைக்கு சென்றது.
**தியாகத் திருமகள் குயிலி,** மருது சகோதரர்கள் போன்ற வீரர்களின் உதவியுடன் **வீரமங்கை வேலு நாச்சியார்** மீண்டும் சிவகங்கையை கைப்பற்றி மூன்றாவது மன்னராக முடிசூடிக் கொண்டார்.

**ஆங்கிலேயர்களுக்கு எதிரான வீரவேள்வியில் வீரத்தாய் குயிலி தன் உடலில் நெய்யை ஊற்றி தீ வைத்துக் கொண்டு ஆங்கிலேயர்களின் ஆயுதக் கிடங்கில் குதித்து ஆயிரக்கணக்கான துப்பாக்கிகளையும், வெடிமருந்துகளையும், அழித்து விட்டு, தானும் எரிந்து சாம்பலானாள்.**

**வேலு நாச்சியாரை** காட்டிக் கொடுக்காத குற்றத்திற்காக இரு துண்டங்களாக வெட்டப்பட்டவள் **உடையாள் காளி.**

**வேலு நாச்சியாரின்** இரண்டு கரங்களாக இருந்து, ஆங்கிலேயர்களிடம் கடைசி வரை போர்புரிந்து வீரமரணம் எய்தார்கள் **மருது சகோதரர்கள்.**

**இந்த நான்கு பெரும் தியாகச் சீலர்களை சிவகங்கை மக்கள் இன்றளவும் தெய்வங்களாக வணங்கி போற்றிவருகிறார்கள்.**

**வேலு நாச்சியாரின்** வெற்றிகளுக்கு காரணமாக இருந்து, நாட்டிற்காக இன்னுயிர் நீத்த **மருது சகோதரர்களின்** தியாகத்தை சிறப்பிக்கும் வகையில் இந்திய அரசு அஞ்சல் தலை வெளியிட்டுள்ளது.

சோழ நாட்டிலிருந்து குடிபெயர்ந்து வந்த **கவிச் சக்கரவர்த்தி கம்பனுக்கு** ஆதரவளித்த **நாட்டரசன் கோட்டையும்,** நகரத்தார்கள் காவிரி பூம்பட்டிணத்திலிருந்து வெளியேறி இங்கு வந்த போது அவர்களுக்கு பாண்டிய மன்னரால் அன்பளிப்பாக வழங்கப்பட்ட **இளையாத்தங்குடி என்ற ஊரும்,** சோழநாடு தருமபுரம் ஆதீன இளவரசராக இங்கு வந்து மகா சந்நிதானமாக விளங்கிய **குன்றக்குடி அடிகளாரின்** பெயரோடு இணைந்துவிட்ட **குன்றக்குடியும்** சிவகங்கைக்கு கூடுதல் பெருமையைச் சேர்க்கின்றன.
**ஐக்கிய நாடுகள் சபையில் பொறிக்கப்பட்டிருக்கும் "யாதும் ஊரே யாவரும் கேளீர்"** என்ற உலகளாவிய **தத்துவ மொழிக்குச் சொந்தக்காரராக** விளங்கும் **கணியன் பூங்குன்றனார்** இங்குள்ள

**மகி–பாலன்–பட்டி**யில் பிறந்தவர் என்பது சிவகங்கை மாவட்டத்திற்கு சூட்டப்பட்ட புகழ் மகுடம் அல்லவா?

சிவகங்கை மாவட்டத்திலுள்ள **திருக்–கோஷ்டியூர்** கோயிலில் இருந்தபடிதான் வைணவ புரட்சித் துறவி **இராமானுஜர்** **“திருமந்திரத்தை”** அனைத்து மக்களுக்கும் உபதேசம் செய்தார்.

சங்க இலக்கியத்தால் புகழப்படும் பாரிவள்ளல் ஆட்சி செய்ததாகக் கூறப்படும் **பிரான்–மலையும்,** அங்கு 12 வருடங்களுக்கு ஒருமுறை பூக்கும் **குறிஞ்சி மலரும்** இந்த மாவட்டத்திற்கு மேலும் புகழைச் சேர்க்கின்றன.

கவிச்சக்கரவர்த்தி கம்பன் தன் இறுதிக் காலத்தில் இங்கு வந்து வாழ்ந்ததால் சிவகங்கை மாவட்டத்தில் இன்றளவும் தமிழ் மணப்பதை இங்கு தோன்றிய தமிழ் அறிஞர்களின் பட்டியலைக் கொண்டு அறிந்து கொள்ளமுடிகிறது.

சங்க கால பெண்பாற் புலவர் **ஒக்கூர் மாசாத்தியார், மா–சாத்துவான், இளையான்குடி மாற–நாயனார். கவியோகி சுத்தானந்த பாரதி, பண்டிதமணி மு. கதிரேசன் செட்டியார்,**

தமிழக மாவட்டங்களைப் பற்றி பல நூல்கள் எழுதிய **சோம. லெக்குமணச் செட்டியார், எழுத்தாளர் தமிழ்வாணன்,**

**இசைமேதை இராமானுஜ அய்யங்கார்,** தமிழிசையை வளர்த்த **செட்டி நாட்டரசர் ராஜா சர்அண்ணாமலை செட்டியார், குன்னக்குடி வைத்தியநாதன்,**

**வள்ளல் அழகப்ப செட்டியார், ஏ.எம்.எம். முருகப்ப செட்டியார், டி.ஐ.சைக்கிள் கம்பெனி அதிபர் எ.எம்.எம். அருணாசலம் செட்டியார்,**

**திரைப்படத் தயாரிப்பாளர் ஏவி.எம். மெய்யப்ப செட்டியார்,**
திரைப்பட இயக்குநர்கள் **கொத்தமங்கலம் சுப்பு, எஸ்.பி.முத்துராமன்,**
என்று இந்த பட்டியல் முடிவில்லாமல் நீண்டு கொண்டே போகின்றது.

கண்ணாத்தாள் கோயில், காளையார்கோயில், காளீஸ்வரர் கோயில், பிள்ளையார்பட்டி கற்பக விநாயகர் கோயில், குன்றக்குடி முருகன் கோயில்,

கண்டதேவி கோயில், இடைகாட்டூர் தேவாலயம், இளையான்குடி பள்ளிவாசல் போன்ற இறை திருத்தலங்களைக் கொண்ட மாவட்டம் சிவகங்கை மாவட்டமாகும்.

**காரைக்குடி செட்டிநாடு அரண்மனைகள், வேட்டங்குடி பறவைகள் சரணாலயம்** போன்ற சுற்றுலா தலங்களையும் உள்ளடக்கியது இந்த சிவகங்கை மாவட்டமாகும். மதுரை தமுக்கம் மைதானத்தில் இருக்கும் **தமிழ்த்தாய் சிலை** காரைக்குடியிலிருந்து மாண்புமிகு **புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர்.** அவர்களால் கொண்டு செல்லப்பட்டு நிறுவப்பெற்றது.

சிவகங்கை **வானம் பார்த்த பூமியாக** இருந்தாலும், **மானம் காத்த பூமியாகும்.**

**சிவகங்கை வீரர்களுக்கு நீர்தாகத்தை விட சுதந்திர தாகம் அதிகமாக இருந்தது.** போர் மேகம் எப்போது மூளும் எப்போது கலையும் என்று யாருக்கும் தெரியாது. மனலூர் போர், திருப்புவனம் போர், காளையார்கோயில் போர், மானாமதுரை போர், திருப்பத்தூர் போர், என்று **ஊருக்கு ஊர் போர்கள் நடந்திருக்கின்றன. இந்தப் போர்களால் சிவகங்கை வரலாற்று ஏட்டில் பக்கத்துக்குப் பக்கம் வீரம் செரிந்து காணப்படுகிறது.**

வீரம் விளைந்த இந்த பூமியில் வீரத்தின் இலக்கணமாகத் திகழ்ந்த மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் நூற்றாண்டு விழாவைக் கொண்டாடுவது என்பது பொருத்தமானதாக நான் கருதுகிறேன்.

மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் தங்கள் திரைப்படங்களில் மட்டுமல்ல, யதார்த்த வாழ்க்கையிலும் வீரமும் துணிவும் மிக்கவர் என்பதற்கு நான் இங்கே சில சம்பவங்களை குறிப்பிட விரும்புகின்றேன்.

வட இந்தியாவில் **தாராசிங்** என்ற மல்யுத்த வீரர் ஒருவர் இருந்தார். அவர் ஒரு முறை தமிழ் நாட்டிற்கு வந்தபோது **“தமிழ்நாட்டில் என்னை எதிர்த்து மல்யுத்தம் செய்து வெல்ல யார் இருக்கிறார்கள் ?”** என்று சவால் விட்டார்.

இதனை தமிழ் நாட்டின் மானப் பிரச்சனையாக எடுத்துக் கொண்ட மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் **“நான் தயார்”** என்றார்கள்.
தாராசிங்குடன் மோதப் போகும் நேரம், இடம் ஆகியவற்றை குறிப்பிட்டு செய்தித் தாள்களில் அறிக்கை வெளியிட்டார்கள்.
இந்தச் செய்தி இந்தியா முழுவதும் வேகமாகப் பற்றிக்கொண்டு அப்போது பரபரப்பாகப் பேசப்பட்டது. அதே நேரம், இது ஒரு பெரிய பிரச்சனையாகி

விட்டதால் **மத்திய அரசு தலையிட்டு தாராசிங்கின் சவாலை வாபஸ்** பெற வைத்தது.

அதைப் போல, இன்னொரு சம்பவத்தையும் நினைவுகூர விரும்புகின்றேன். **"தாயைக் காத்த தனயன்"** என்ற படத்தில் மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் புலியுடன் மோதும் காட்சி படமாக்கப்பட்டது.

பாதுகாப்பிற்காக புலியின் வாய் தைக்கப்பட்டிருந்தது. அதனால் கோபமடைந்த புலி, மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களை தன் கால்களால் தாக்க, மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் சுதாரித்துக் கொண்டு புலியுடன் நிஜ சண்டையில் இறங்கினார்கள்.

படப்பிடிப்புக் குழுவினர் செய்வதறியாது திகைத்து நின்றனர். மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் புலியை அடக்கி எல்லோரையும் ஆச்சரியத்தில் ஆழ்த்தினார்கள்.

இப்படி எந்த சவாலாக இருந்தாலும் தான் நேரில் சந்தித்து அவற்றை வெல்லக் கூடிய வீரராகத் திகழ்ந்தவர் நம் கழகத்தின் பிரம்மா, பிதாமகர் மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள்.

அதைப்போல, வாளெடுத்து, போர்க் களம் கண்டு, எதிரிகளை ஓடஓட விரட்டிய தென்னகத்தின் ஜான்சிராணி வீரமங்கை வேலு நாச்சியாரின் மறு அவதாரமாகத் திகழ்ந்த நமது கழகத்தின் வீரத்தாய், வெற்றித் திருமகள், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், அரசியல் களத்தில் தனி ஒரு பெண்ணாக நின்று எதிரிகளை வென்று காட்டியவர் என்பதை யாராலும் மறுக்கமுடியாது. **இருபெரும் தலைவர்களும் எதிரிகளுக்கு இரும்பு மனிதர்களாகவும், எளியவர்களுக்கு இளகும் மனிதர்களாகவும் வாழ்ந்தார்கள்.**

குறிப்பாக, மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் அன்புக்காக கண்கலங்கி இருப்பாரே தவிர ஒரு காலமும் தனக்கு நேர்ந்த ஆபத்திற்காக கண்கலங்கியிருக்க மாட்டார்கள்.

அவர் நடித்த படங்களில் கூட அவர் அழுது நாம் அதிகமாக பார்த்திருக்க முடியாது.
மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் நாடக உலகில் காலடி எடுத்து வைத்து நடித்த முதல் நாடகம் மகாபாரதமாகும்.

அர்ச்சுனனுக்கு வில்வித்தையில் அம்புகளை எடுத்துக் கொடுக்கும் இளவரசன் **உத்திரன்** என்ற வீரனாக அறிமுகமாகி, **மதுரையை மீட்ட சுந்தரபாண்டியனாக** தனது திரைவாழ்க்கையை நிறைவு செய்தவர் மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள்.

எனவே, **வீரம் என்பது அவர் ரத்தத்தில் கலந்திருந்தது. அவருக்கு எப்படி கண்ணீர் வரும்?.**

மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் இரண்டாவது நாடகமான நல்ல தங்காளில் வறுமையில் வாடும் தாயின் ஏழாவது குழந்தையாக மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் நடித்தார்கள்.

ஆறு குழந்தைகளைக் கிணற்றில் தூக்கி போட்ட பின்பு ஏழாவது குழந்தையான மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களை தூக்கிப்போடப்போகும் போது தன் தாயாரைப் பார்த்து **"அம்மா, தப்பிப் பிழைத்தால், தகப்பன் பேரைச் சொல்லுவேன், ஓடிப் பிழைத்தால் உன் பேரைச் சொல்லுவேன், அதனால் என்னை மட்டுமாவது உயிரோடு இருக்க விடும்மா!"** என்ற சோகமான வசனத்தை மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள் சரியாகப் பேசினார்கள். அந்த சோகமான வசனத்தை அழுது கொண்டே சோகத்துடன் பேசி இருக்க வேண்டும். ஆனால் மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களுக்கு அழுகையே வரவில்லை.

அழுவதுபோல் முகத்தை மறைத்துக் கொண்டார்கள். நாடகக் கம்பெனியினர் அழுகையை வரவழைக்க எவ்வளவோ முயன்றும் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களை அழவைக்கவும் முடியவில்லை. அன்று. அவர் – நடித்து சம்பாதிக்கும் கூலியைக் கொண்டுதான் சாப்பிட வேண்டும் என்ற வறுமை நிலையில் இருந்த போதும் அவரால் அப்படி நடிக்க முடியவில்லை.

**"சிரித்து வாழ வேண்டும், பிறர் சிரிக்க வாழ்ந்திடாதே!**
**உழைத்து வாழ வேண்டும், பிறர் உழைப்பில் வாழ்ந்திடாதே!"** என்று சிரிப்புக்கு புதிய இலக்கணம் வகுத்தவர் மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள்.

அதைப்போல முற்போக்கு சிந்தனை கொண்ட புரட்சிப் பெண்ணுக்கான பாத்திரங்களையே விரும்பி ஏற்று நடித்தவர் நமது மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள்.

இருபெரும் தலைவர்களின் வீர வாழ்க்கையே தொண்டர்களாகிய நமக்கு செய்தியாக இருக்க வேண்டும். வீரம் செறிந்த கழகத்தின் பாசறையிலிருந்து உருவானவர்கள் நாம்.

எத்தனை காலமானாலும் அ.இ.அ.தி.மு.க.தான் தமிழ் நாட்டை நிரந்தரமாக ஆளும். மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் ஆசிபெற்ற தொண்டர்களும்,
மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழிவந்த தொண்டர்களும் தான் தமிழ் நாட்டை ஆளுவார்கள்.

எனக்கு முன்னேலே உங்களுடைய மாவட்ட அமைச்சர் அவர்கள் திரு.பாஸ்கரன் அவர்கள் குறிப்பிட்டார், நானும் விவசாய குடும்பத்தைச் சேர்ந்தவன் , அவரும் விவசாய குடும்பத்தைச் சேர்ந்தவர், துணை முதலமைச்சர் அவர்களுடைய விவசாய குடும்பத்தைச் சேர்ந்தவர். ஆகவே, இங்கே மேடையிலே வீற்றிருக்கின்ற 100க்கு 90 பேர்களும் விவசாயக் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். அதேபோல், அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தில் இருப்பவர்களும் 100க்கு 90 பேர் விவசாயத்தை நம்பி வாழக்கூடிய விசுவாசமிக்கவர்கள். எனவே, அப்படிப்பட்டவர்கள் நாங்கள் அத்தனை பேருமே. ஆகவே, அவர்கள் சொல்கின்றபொழுது, புரட்சித்தலைவி அம்மா அவர்கள் நம்மிடத்திலே இல்லை, இறைவன் அம்மாவை எடுத்துக் கொண்டார். அவருக்குப் பின்பு, நீங்கள் இருவரும் பொறுப்பேற்றிருக்கிறீர்கள், உங்களை நம்பி நாங்கள் இருக்கிறோம் என்று சொன்னீர்கள். நிச்சயமாக, நீங்கள் எண்ணுகின்ற எண்ணப்படி இந்த அரசும், ஆட்சியும், கட்சியும் செயல்படும் என்பதை இந்த நேரத்திலே கோடிட்டு காட்டுகின்றேன். ஏனென்று சொன்னால், ஒரு விவசாயி எப்படி நிலத்தில் உழுது, நிலத்தை பண்படுத்தி, பயிர்கள் நடவு செய்து விளைச்சலை பெறுசின்றானோ, அதேபோல, மேடையிலே வீற்றிருக்கின்ற நானும், அண்ணன் ஓ.பி.எஸ் அவர்களும், அமைச்சர் பெருமக்களும், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களும், கழகத்தினுடைய அனைத்து மட்ட தொண்டர்களோடு இணைந்து பணியாற்றி
இந்த அரசுக்கு, ஆட்சிக்கு நற்பெயரை ஏற்படுத்துவோம் என்று இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன். அதேபோல பொன்மனச் செம்மல் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களும், இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களும் எப்படி கட்சியை வழிநடத்தினார்களோ, அதேபோல் அத்தனை பேருடைய ஒத்துழைப்போடு, சிறப்பாக கட்சியை வழிநடத்தி செல்வோம் என்ற உறுதியை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

நான் 1974ல் இந்த இயக்கத்தில் இணைந்தேன். கிட்டத்தட்ட 43 ஆண்டுகாலம் சிந்தாமல், சிதறாமல், எந்தவித சறுக்கலுக்கும் ஆளாகாமல்

நிலைத்து நின்று பொன்மனச்செம்மல் புரட்சித்தலைவம் எம்.ஜி.ஆருடைய ஆட்சிக்காலத்திலேயிருந்து, இன்றுவரை கழகத்திற்கு விசுவாசமாகவும், உண்மையாகவும், நேர்மையாகவும் பாடுபட்டுக் கொண்டிருக்கின்ற காரணத்தினாலே உங்களால் இந்த உயர்ந்த பதவி எனக்கு கிடைத்திருக்கிறது என்பதை இந்தத் தருணத்திலே தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். 43 ஆண்டுகாலம் உழைத்திருக்கின்றோம், ஆறு முறை சிறை சென்றிருக்கின்றேன், நாடாளுமன்ற உறுப்பினராக இருந்திருக்கின்றேன், சட்டமன்ற உறுப்பினராக இருக்கின்றேன், அமைச்சராக இருந்திருக்கின்றேன், அதற்குப் பிறகுதான் முதலமைச்சர் பதவி உங்கள் மூலம் எனக்கு கிடைத்திருக்கின்றது. எனவே, தொண்டர்களுடைய எண்ணப்படி ஆட்சியும், கட்சியும் நடக்கும் என்பதை இந்த நிகழ்ச்சியின் வாயிலாக தெரிவித்துக் கொள்கின்றேன்.

மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் மதுரையை மீட்ட சுந்தரபாண்டியன் என்ற படத்தில் நடித்துக்கொண்டிருக்கும் போதே தமிழ் நாட்டின் முதலமைச்சராகி விட்டார்கள்.

மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் நடித்து வெளிவந்த கடைசி திரைப்படமும் அதுதான். அந்தப் திரைப்படத்தில் அமைந்த ஒரு பாடல் அ.இ.அ.தி.மு.க செயின்ட் ஜார்ஜ் கோட்டையை பிடிக்கப்போகிறது என்பதைத் தீர்க்க தரிசனமாக கூறியது.

**‘‘தாயகத்தின் சுதந்திரமே எங்கள் கொள்கை’’**
என்ற அந்த பாடலில்

**‘‘ கோட்டையிலே நமது கொடி பறந்திட வேண்டும்,**
**கொள்கை வீரர் தியாகங்களை ஏற்றிட வேண்டும்.**
**புரட்சியிலே சரித்திரத்தை மாற்றிட வேண்டும்,**
**பொது உடமை சமுதாயம் மலர்ந்திட வேண்டும்’’**

என்று எழுதப்பெற்ற வரிகளை அப்போது கழகத்தொண்டர்கள் திரைப்பாடலாக மட்டுமே ரசிக்காமல் மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் தங்களுக்கு இட்ட கட்டளையாக ஏற்றுக் கொண்டு உழைத்தார்கள். அதன் விளைவாகத்தான் அன்றிலிருந்து இன்று வரை நம் கழகம் கோட்டையில் கோலோச்சிக் கொண்டிருக்கிறது.

மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களின் உள்ளத்தில் உதித்த எண்ணங்களை எழுத்தாக்கி பாடலாக பதிய செய்தவர் **இந்த மண்ணின் மைந்தராகிய கவிஞர் முத்துலிங்கம் என்பது சிவகங்கை மாவட்டத்திற்கு கிடைத்த பெருமையல்லவா?**

மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களால் திரையோடும், கழகத்தோடும் சேர்த்து வளர்க்கப் பட்டவர்களில் கவிஞர் முத்துலிங்கமும் ஒருவர்.

அதனால் தான் மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களால் நியமிக்கப்பட்ட மூன்று அரசவைக் கவிஞர்களில் இரண்டு கவிஞர்கள், **இவர் ஒருவர், மற்றவர் கவிஞர் கண்ணதாசன்,** ஆகிய இருவரும் – இந்த சிவகங்கை மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள். இதிலிருந்தே மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள் சிவகங்கை மாவட்டத்தின் மீது வைத்திருந்த மரியாதை நமக்கு தெரிகிறது.

மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள் முதலமைச்சராக பொறுப்பேற்ற முதல் வருடத்திலேயே சிவகங்கை மாவட்டத்திலுள்ள பையூர் பிள்ளை வயல் கிராமத்தில் ஏழை நரிகுறவர்களுக்காக குடியிருப்புகளை கட்டித்தந்தார்கள்.

அதைப்போல மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள் 1980– ஆம் ஆண்டு காரைக்குடியில் இருந்த நெசவாளர்களுக்கு “ **நெசவாளர் நகர்**” என்ற குடியிருப்புகளை உருவாக்கினார்கள்.

ஒருங்கிணைந்த ராமநாதபுரம் மாவட்டத்திலிருந்து சிவகங்கையை தனி மாவட்டமாக உருவாக்கியது, மானாமதுரையில் சிப்காட் தொழிற்சாலையை உருவாக்கியது, மன்னர் துரைசிங்கம் கல்லூரியை அரசு கல்லூரியாக மாற்றியது, இணைப்புப் பாலங்களைக் கட்டியது, காரைக்குடி ஆவின் நிறுவனத்தைத் தொடங்கியது, காரைக்குடியில் அழகப்பா பல்கலைக்கழகத்தை உருவாக்கியது, மருது சகோதரர்களின் வாரிசுதாரர்களுக்கு ஓய்வூதியம் வழங்கியது – இப்படி பலவற்றை சொல்லிக் கொண்டே போகலாம்.

மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள் சிவகங்கைக்கு செய்ய வேண்டுமென்று விரும்பிய அனைத்தையும் **மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா** அவர்கள் தான் ஆட்சிக்கு வந்தபிறகு தொடர்ந்து செய்தார்கள்.

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு பிறகு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியால் நடைபெறும் கழக ஆட்சியில் சிவகங்கைக்கு ஏராளமான திட்டங்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

இருபெரும் தலைவர்களின் எண்ணங்களையும், விருப்பங்களையும் நிறைவேற்றும் தொண்டர்களாகிய நாங்கள் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றோம்.

குடிமராமத்து திட்டத்தின் கீழ் 24 கோடியே 31 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 117 கண்மாய்கள் புதுப்பிக்கும் பணி உட்பட 34 கோடியே 7 லட்சம் ரூபாய் மதிப்பிலான 127 பணிகளுக்கு அடிக்கல் நாட்டியுள்ளேன்.

பொதுப்பணித்துறையின் மூலம் நிறைவேற்றப்பட்ட 32 கோடியே 3 லட்சம் ரூபாய் மதிப்பிலான திட்டங்கள் உட்பட 44 கோடியே 58 லட்சம் ரூபாய் மதிப்பிலான 88 பணிகளை நான் இன்று துவக்கி வைத்துள்ளேன்.

சிவகங்கை மாவட்டத்தில் பல்வேறு துறைகளின் சார்பில் 15 ஆயிரத்து 689 பயனாளிக்களுக்கு 39 கோடியே 2 லட்சம் ரூபாய் மதிப்பிலான நலத்திட உதவிகளை வழங்க உள்ளேன்.

**இந்த அரசு பொறுப்பேற்றது முதல் இன்று வரை 11 ஆயிரத்து 367 கோடியே 87 லட்சம் ரூபாய் மதிப்பிலான 35 ஆயிரத்து 483 பணிகளை துவக்கி வைத்தும், 4 ஆயிரத்து 838 கோடியே 27 லட்சம் ரூபாய் மதிப்பிலான 6 ஆயிரத்து 994 பணிகளுக்கு அடிக்கல் நாட்டியும் உள்ளேன். ஆக மொத்தம் 16 ஆயிரத்து 206 கோடியே 14 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 42ஆயிரத்து 477 பணிகள் நடைபெற்று வருகின்றன.**

ஆகவே எதிர்கட்சியைச் சேர்ந்த மு.க.ஸ்டாலின், முன்னாள் பொதுப்பணித் துறை அமைச்சராக இருந்து, இன்றையதினம் எதிர்க்கட்சியினுடைய தி.மு.க. சட்டமன்ற துணைத்தலைவராக இருக்கின்ற துரைமுருகன் அவர்கள், என்ன செய்தீர்கள் என்று கேட்டார். இவ்வளவும் நாம் செய்திருக்கின்றோம் என்று இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

சிவகங்கை மாவட்டத்தில், கடந்த ஆறு ஆண்டுகளாக அம்மாவினுடைய ஆட்சியில் நடைபெற்ற பணிகள் சிறவற்றை கோடிட்டுக் காட்ட விரும்புகிறேன்.

படித்த ஏழை பெண்களுக்கான திருமண உதவி திட்டத்தின் கீழ் 20 ஆயிரத்து 711 படித்த ஏழை பெண்களுக்கு 67 கோடியே 26 லட்சம் ரூபாய் நிதி உதவியும் 785.38 கிலோ கிராம் தங்கமும் வழங்கப்பட்டுள்ளது. 29 ஆயிரத்து 781 மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு 592 கோடியே 91 லட்சம் ரூபாய் வங்கிக் கடன் நேரடியாக வழங்கப்பட்டுள்ளது.

விலையில்லா மடிக்கணிகள் வழங்கும் திட்டத்தின் கீழ் மாணாக்கர்களுக்கு 71 கோடியே 96 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 47 ஆயிரத்து 747 மடிக்கணினிகள் வழங்கப்பட்டுள்ளன.

முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீட்டு திட்டத்தின் கீழ் 70 கோடியே 5 லட்சம் ரூபாய் செலவில் 36 ஆயிரத்து 589 பேர் பயன் அடைந்துள்ளனர்.

டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி மகப்பேறு நிதியுதவி திட்டத்தின் கீழ் 74 ஆயிரத்து 619 கர்ப்பிணித் தாய்மார்களுக்கு 77 கோடியே 9 லட்சம் ரூபாய் நிதி உதவி வழங்கப்பட்டுள்ளது. குடிமராமத்து பணிகள் திட்டத்தின் கீழ் 3 கோடியே 84 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 39 பாசன கண்மாய்கள் புதுப்பிக்கப்பட்டுள்ளன.

விவசாயிகளுக்கு விலையில்லா வண்டல் மண் வழங்கும் திட்டத்தின் கீழ் 2 ஆயிரத்து 240 கண்மாய்கள் தூர்வாரப்பட்டு 3 லட்சத்து 23 ஆயிரத்து 549 கன மீட்டர் வண்டல் மண் 8 ஆயிரத்து 773 விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது.

மகசூல் பாதித்த விவசாயிகளுக்கு வறட்சி நிவாரணமாக 149 கோடியே 78 லட்சம் ரூபாய் வழங்கப்பட்டுள்ளது. இதன் மூலம் 2 லட்சத்து 48 ஆயிரத்து 965 விவசாயிகள் பயன் பெற்றுள்ளனர்.

டெல்டா மாவட்டங்களில் மட்டுமல்லாமல், தமிழ்நாட்டிலுள்ள அனைத்து மாவட்டங்களிலும் பிரதம மந்திரி பயிர் காப்பீட்டுத்திட்டம் சிறப்பாக செயல்படுத்தப்படுகிறது.

சிவகங்கை மாவட்டத்தில் மட்டும் இத்திட்டத்தின் கீழ் 236 கோடியே 49 லட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டு, 64 ஆயிரத்து 675 விவசாயிகள் பயன் அடைந்துள்ளனர்.

கூட்டுறவு சங்கங்களின் மூலம்   விவசாயிகளுக்கு வழங்கப்பட்ட 96 கோடியே 54 லட்சம் ரூபாய் பயிர்க்கடன் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. இதன் மூலம் 30 ஆயிரத்து   317 விவசாயிகள் பயன் பெற்றுள்ளனர்.

தூய்மை பாரத இயக்க திட்டத்தின் கீழ்  65 கோடியே 69 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில்  56 ஆயிரத்து 575 தனிநபர் கழிப்பறைகள் கட்டி வழங்கப்பட்டுள்ளன.

தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும்   பகிர்மான  கழகத்தின் சார்பில் 30  கோடியே 26 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 3 துணை  மின்நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

நெடுஞ்சாலைத்துறை நபார்டு மற்றும்  கிராமச் சாலைகள் திட்டத்தின் கீழ் 42 கோடியே 86 லட்சம் ரூபாய் செலவில்  21 பாலங்கள், 14 கோடியே 5 லட்சம் ரூபாய்  மதிப்பீட்டில் 78 கிலோ மீட்டர் சாலைப் பணிகள்  மற்றும் நெடுஞ்சாலைத்துறை கட்டுமானம்  மற்றும்  பராமரிப்பு பிரிவின் கீழ் 253 கோடியே   52 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 1545.78 கி.மீ சாலைகள் மேம்படுத்தப்பட்டுள்ளன.

இந்த மாவட்டத்தில் பாசன கண்மாய்கள்  பழுதுபார்த்து, புனரமைத்து , புதுப்பித்தல்   திட்டத்தின் கீழ் 7 கோடியே 43 லட்சம்   ரூபாய் மதிப்பீட்டில் 19 பாசனக் கண்மாய்களில்  பணிகள் செய்து முடிக்கப்பட்டுள்ளன.

இந்த மாவட்டத்தில்   வீரமங்கை வேலுநாச்சியார் நினைவு மண்டபம், வீரத்தாய் குயிலி நினைவு சின்னம்,   கவியரசு கண்ணதாசன் மணி மண்டபம், தவத்திரு குன்றக்குடி அடிகளார் மணி மண்டபம்,  மருது பாண்டியர்கள் நினைவு மண்டபம்  ஆகியவைகள் பராமரிக்கப்பட்டு வருகின்றன.

திருப்புவனம் பேரூராட்சி அருகில்   வைகை ஆற்றின் குறுக்கே 10 கோடி ரூபாய் செலவில்  தடுப்பணைகள் கட்டும் பணிகள்   நடைபெற்று    வருகின்றன.

சிலர் மக்களுக்காக தொண்டு செய்வதாகவும், அவர்கள் நலன்களுக்காகவே தங்கள் வாழ்க்கையை தியாகம் செய்யதாகவும் கூறுவதை நம்பாதீர்கள்.

உண்மையில் அப்படிப்பட்டவர்கள் அப்பாவி

பாமர மக்களை வஞ்சித்து அவர்களை சுரண்டி
சுகபோக வாழ்வு வாழ்பவர்கள் என்பதை
நாம் கடந்த காலத்தில் தெரிந்து கொண்டோம்.
இதைக் கூறுகிறபோது எனக்கு ஒரு
கதை நினைவுக்கு வருகிறது.

ஒரு சேவல் மரத்தின் மீது உட்கார்ந்துக் கொண்டு இருந்தது. காலை நேரம் ரம்மியமாக இருந்ததால் ஆனந்தமாக கூவியது.

அந்த சமயம் அங்கு வந்த நரிக்கு நல்ல பசி. அதற்கு சேவலை பிடித்து சாப்பிட ஆசைப்பட்டது. அது மரத்தின் மீது இருந்ததால் அதனால் அதை பிடிக்க முடியவில்லை. ஒரு தந்திரம் செய்தது.

**"சகோதரனே வணக்கம். ஒரு நல்ல செய்தி,. பறவைகளுக்கும், மிருகங்களுக்கும் ஒரு சமாதான ஒப்பந்தம் ஏற்பட்டு விட்டது. இனி ஒருவருக்கொருவர் சண்டை போட்டுக் கொள்ளக்கூடாது. அன்பாக நடந்துக் கொள்ள வேண்டும். சகோதர மனப்பான்மையை வளர்க்க வேண்டும் என்று கூறியது. அதனால் கொஞ்சம் கீழே வா நாம் இருவரும் இதுப் பற்றி பேசுவாம்"** என்றது.

ஆனால் நரியின் தந்திரப் பேச்சை சேவல் புரிந்துக் கொண்டது. தூரத்தில் எதையோ பார்ப்பது போல் தலையை தூக்கி பார்த்தது.

உடனே நரி தலையை தூக்கி தொலைவில் என்ன பார்க்கிறாய் என்று கேட்டது. அதற்கு சேவல், **அங்கே சில வேட்டை நாய்கள் வருவது போல் தெரிகிறது. அவை வேட்டை நாய்கள் தானா என்று பார்க்கிறேன்** என்று கூறியது.

**அதைக் கேட்ட நரி பயந்துக் கொண்டு உடனே அங்கிருந்து ஓடிவிட்டது.**

உடனே சேவல், **"நானும் கிழே வருகிறேன். நாயை கண்டு ஏன் பயப்படுகிறாய். இப்பொழுதுதான் நீ சொன்னாய் ஒப்பந்தம் ஏற்பட்டு விட்டது"** என்று கேட்டது

அதற்கு நரி **"அந்த ஒப்பந்தத்தைப் பற்றி அநேக பேர் கேள்விப் பட்டிருக்க மாட்டார்கள். நாய்களுக்கு தெரிந்திருக்காவிட்டால் என் கதி என்னாவது"** என்று ஓட்டம் பிடித்தது.

உடனே சேவல் **“யாரிடம் ஏமாற்றப் பார்க்கிறாய் உன்னிடம் கெட்டிக் கார பொய்கள் என்னிடம் பலிக்காது”** என்று நரியிடம் கூறியது.

இவ்வாறுதான் பல பேர் துணிந்து மக்களிடம் புழுகு மூட்டைகளை அள்ளி வீசிக் கொண்டிருக்கின்றனர். உண்மைத் தெரிந்தால் மக்களின் முகத்தில் எப்படி விழிப்போம் என்ற எண்ணம் சிறிதும் இல்லாமல், பொய் மூட்டைகளை தினமும் அவிழ்த்து விடுவதே சிலரது வாடிக்கையாக உள்ளது என்பதை மக்களாகிய நீங்கள்அறிவீர்கள்.

மாண்புமிகு புரட்சித்தலைவர் வழியில், மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியில் நடைபெற்று வரும் அம்மாவின் அரசு, வறட்சி காலங்களின் போதும் சரி, மழைக்காலங்களிலும் சரி, நிவாரணப் பணிகளை மக்களே பாராட்டும் வகையில் சிறப்பாக செய்துக் கொண்டிருக்கிறது. மக்கள் இந்த அரசின் நடவடிக்கைகளை பாராட்டுகிறார்கள். இந்த கதையில் வரும் நரியைப் போல் ஒரு சிலர் என்ன முயற்சி செய்தாலும் அது தோல்வியில்தான் போய் முடியும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்றைக்கு எதிர்க்கட்சித்தலைவர்களும், அவரது கட்சியைச் சார்ந்தவர்களெல்லாம் சட்டம், ஒழுங்கு சீர்குலைந்து விட்டதைப் போல ஒரு தோற்றத்தை ஏற்படுத்திக் கொண்டிருக்கின்றார்கள். இன்றைக்கு, உண்மையிலேயே புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆட்சியின்போதும் சரி, மாண்புமிகு புரட்சித்தலைவி மறைவிற்குப் பிறகு அம்மாவினுடைய அரசு செயல்பட்டுக் கொண்டிருக்கும்போதும் சரி, தமிழகத்திலே சட்டம், ஒழுங்கு நிலைநாட்டப்பட்டுக் கொண்டிருக்கின்றது. இன்றைக்கு தமிழகம், இந்தியாவிலேயே அமைதி பூங்காவாக நிலவிக் கொண்டிருக்கின்றது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். கடந்த ஓராண்டு காலமாக, மாண்புமிகு அம்மாவினுடைய வழியில் செயல்பட்டு வரும் இவ்வரசைப் பற்றி குறை கூற ஏதும் இல்லாததால், திமுக, இந்த மாநிலத்தில் சட்டம், ஒழுங்கு சீர்குலைந்து விட்டது என பொய்யான குற்றச்சாட்டுகளை தினந்தோறும் ஊடகங்களில், திரும்பத்திரும்ப கூறி அவற்றை உண்மையாக்க முயன்று வருகின்றனர். ஆனால் உண்மை என்னவெனில், அவர்கள் ஆட்சியின்போது, சட்டம், ஒழுங்கு எவ்வாறு சீர்குலைந்தது என்பது பொதுமக்களுக்கு நன்கு தெரியும். இங்கு கூடியுள்ளவர்களில் பலர் நேரடியாக பாதிக்கப்பட்டவர்கள் இருப்பீர்கள், அதனால் தான், நீங்கள், கடந்த 2011ஆம் ஆண்டு ஆட்சிக்கட்டிலில் இருந்த அவர்களை தூக்கி எறிந்தீர்கள், இதற்கு நேர்மாறாக, அனைத்திந்திய அண்ணா

திராவிட ஆட்சியின் போது சட்டம், ஒழுங்கு சீராக பராமரிக்கப்பட்டதனால், அம்மாவினுடைய ஆட்சி 2016ல் மீண்டும் அமைக்கப்பட்டது. இன்றைக்கு சட்டம், ஒழுங்கு தமிழ்நாட்டிலே சீர்குலைந்து விட்டது என்று சொல்லிக் கொண்டிருக்கும் எதிர்க்கட்சிக்கு நான் சில குறிப்புகளை குறிப்பிட விரும்புகின்றேன். மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மாவினுடைய பொற்கால ஆட்சியில் எவ்வாறு நடைபெற்றது என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் 2010ம் ஆண்டு வரை கொலை வழக்குகள், ஆதாயக் கொலைகள், கொள்ளைகள், களவு வழக்குகள், இப்படி பல்வேறு வழக்குகள் 14583 பதியப்பட்டன. ஆனால், புரட்சித்தலைவி அம்மாவினுடைய பொற்கால ஆட்சியில், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக்கழக ஆறாண்டுகால ஆட்சியில் இந்த சம்பங்கள் 12128 ஆக குறைக்கப்பட்டிருக்கின்றன. ஆகவே, தமிழகத்தில் சட்டம், ஒழுங்கு சிறப்பாக இருக்கின்றது என்பதற்கு இதுவே ஒரு உதாரணம். அதேபோல், பெண்களுக்கு எதிரான குற்றங்கள், இன்றைக்கு வரதட்சணைக் கொலைகள், மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியில், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆறாண்டுகால ஆட்சியில் இந்த சம்பவங்கள் 12128 ஆக குறைக்கப்பட்டிருக்கின்றன. ஆகவே தமிழகத்தில் சட்டம், ஒழுங்கு சிறப்பாக இருக்கிறது என்பதற்கு இதுவே ஒரு உதாரணம். அதேபோல பெண்களுக்கு எதிரான குற்றங்கள், வரதட்சணைக் கொலைகள், பாலியல் கொடுமை வழக்குகள், மானபங்க வழக்குகள், கணவர் மற்றும் அவரது உறவினரால் துன்புறுத்தப்படும் வழக்குகள், கடத்தல் வழக்குகள், இப்படி பல வழக்குகள் திராவிட முன்னேற்றக் கழகத்திலே பதியப்பட்டன. அந்த வழக்குகளை விட, புரட்சித்தலைவி அம்மா அவர்கள் ஆட்சியிலே இருந்தவரை குறைந்த வழக்குகள் தான் பதியப்பட்டுள்ளன என்பதை இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட விழைகின்றேன். ஆக திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியைவிட, அம்மாவினுடைய அரசால் தான் இன்றைக்கு சட்டம், ஒழுங்கு சீர் செய்யப்பட்டிருக்கின்றது என்பதை இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட கடமைப்பட்டிருக்கிறேன். மேலும், திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியின்போது, நடைபெற்ற சில நிகழ்வுகளை இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விழைகின்றேன். கடந்த 2006 ஆம் ஆண்டு தென்காசியிலிருந்து குமாரபாண்டியன் கொலை செய்யப்பட்டார், திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே. 2000–ல் இதே சிவகங்கை மாவட்டத்தில் சிவகங்கை நகரமன்றத்தலைவர் வாகனத்தில் செல்கின்றபொழுது, சினிமாவில் வருகின்ற காட்சி போல் ரிமோட் குண்டு வைத்த வெடிக்கச் செய்து படுகொலை செய்த ஆட்சி திமுக ஆட்சி என்பதை நினைவுகூற விரும்புகின்றேன். அதே ஆண்டில் திமுக மாவட்ட செயலாளர் பூண்டி கலைச்செல்வன் மற்றும் செங்கல்பட்டு

நகராட்சி துணைத்தலைவர் குமார் ஆகியோர் கொலை செய்யப்பட்டனர். 2008ல் பா.ஜ.க.திருவாரூர் மாவட்ட செயலாளர் மாணிக்கம் மற்றும் அவர் தந்தை ஆகியோர் கூலிப்படையால் தஞ்சாவூர் மாவட்டத்தில் கொலை செய்யப்பட்டனர். 2010ல் அதிமுக முன்னாள் அமைச்சர் வெங்கடாசலம் கொலை செய்யப்பட்டார். 2007 ஆம் ஆண்டு யார் பெரியவர்கள் என்ற சண்டை வருகின்றபொழுது அரசியல் வாரிசு யார் என்பதை வெளிப்படுத்துகின்ற அந்த கருத்துக்கணிப்பைத் தொடர்ந்து திமுக ஆட்சியின் ஒரு கும்பல் நடத்திய வெறியாட்டத்தால், மதுரையில் பத்திரிகை அலுவலகம் சூறையாடப்பட்டது. தீக்கிரையாக்கப்பட்டு மூன்று அப்பாவி உயிர்கள் தீக்கிரையாக்கப்பட்டனர். அதே ஆண்டில் திருநெல்வேலி மாவட்டம் தென்காசியில் இரு மதத்தினரிடையே ஏற்பட்ட மோதலில், 6 பேர் கொல்லப்பட்டனர். திருவாரூர் மாவட்டம், குடவாசல் பகுதியில் இரு கோஷ்டியினரிடையே நடந்த துப்பாக்கிச்சூட்டில் இருவர் கொல்லப்பட்டனர். 2008ஆம் ஆண்டு எழும்பூர் நீதிமன்றத்தில், வழக்கறிஞர் ஒருவர் வெட்டிக் கொல்லப்பட்டார். அதே ஆண்டில் அதியமான்கோட்டை காவல் நிலையத்தில் இருந்த துப்பாக்கிகள் மாயமாகின. ஆகவே, இவர்கள் ஆட்சியில், சட்டம், ஒழுங்கு எவ்வாறு இருந்தது என்பதை இந்த நேரத்திலே கோடிட்டு காட்டுகிறேன். ஆகவே, இதயதெய்வம் புரட்சித்தலைவியினுடைய அரசு கவனமாக சட்டம், ஒழுங்கை பராமரிக்கின்றது. அதனால் தமிழகம் அமைதிப்பூங்காவாக திகழ்கிறது என்பதை சுட்டிக் காட்ட விரும்புகின்றேன். அதேபோல, இன்றையதினம், முன்னாள் பொதுப்பணித் துறை அமைச்சராக இருந்தவர், இன்றைக்கு திமுகவினுடைய எதிர்க்கட்சித் துணைத்தலைவராக இருக்கின்ற துரைமுருகன் அவர்கள் பொதுப்பணித்துறையிலே ஆயிரக்கணக்கான கோடிகள் மாயமாகிவிட்டதென்று குற்றம் சாட்டியுள்ளார். மாண்புமிகு துணை முதலமைச்சர் இருந்த காலத்திலும், நான் பொதுப்பணித்துறை அமைச்சராக இருந்த காலத்திலும், 5000 கோடி எங்கே போய்விட்டதெறு ஒரு குற்றச்சாட்டை சொன்னார். எங்கேயும் போகவில்லை, தமிகத்தில் தான் இருக்கின்றது. அத்தனையும் கட்டடங்களாக இருக்கின்றன, பாசன மேம்பாட்டு திட்டங்களாக காட்சி அளித்துக் கொண்டிருக்கின்றன. அதெல்லாம் அவர்களுக்கு கண்ணுக்குத் தெரியாது. எப்பொழுதும் அவர்கள் நினைவில் இருப்பது ஊழல் தான். மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் ஆட்சியிலே போடப்பட்ட திட்டங்கள் என்ன என்பது ஒரு சிலவற்றை குறிப்பிட விரும்புகின்றேன். பாசனத் திட்டத்தின் வாயிலாக 2011–2012 நீர்வள, நிலவள திட்டத்தின் கீழ் 116 கோடி பணி முடிவடைந்தது. 2011–2012ல் காவிரி டெல்டாவில் மதகுகள் சீரமைக்கும் பணி 960.66 கோடியில் நடைபெற்று வருகின்றது. 2011–2012 அனைத்து மாவட்டங்களிலும் ஏரிகள், குளங்கள் சீரமைக்கும் பணி 258.72 கோடியில் பணி நிறைவு பெற்றது. 2011–2012 பெரம்பலூர் மாவட்டம் மருதையாறு நீர்தேக்கம்

கட்டும் பணி 124.20கோடி பணி நடைபெற்று வருகிறது. 2011–2012 சென்னையில் நீர்சேமிப்பு அணையை உயர்த்தி அமைக்கும் பணி 495 கோடி பணி நடைபெற்று வருகிறது. 2011–2012 நீர்வள, நிலவளத் திட்டம் 128.33 கோடி பணி முடிந்துள்ளது. 2012–2013 தாமிரபரணி கருமேனியாறு நம்பியாறு இணைப்புத் திட்டம் 371 கோடி பணி நடைபெற்று வருகிறது. 2012–2013 நிதி பராமரிப்பு நீர் நிலைகள் பராமரித்தல் 199.99 கோடி பணி நிறைவு பெற்றுள்ளது. 2012–2013 நபார்டு ஆலியார் திட்டம் கால்வாய் 221.15 கோடி பணி நிறைவு பெற்றது. 122 அணைகள் புனரமைக்கும் மேம்பாட்டுத் திட்டம் 469 கோடி பணி நிறைவு பெற்று வருகிறது. 2013–2014 காவிரி பாசனப் பகுதி மேம்பாட்டுத் திட்டம் 960.66 கோடி பணி நடைபெற்று வருகிறது. 2015–2016 நபார்டு பராமரிப்பு, நீர்நிலைகளை பராமரிக்கும் திட்டம் 260.19 கோடியில் பணிகள் நடைபெறுகிறது. 2016–2017 உலகவங்கி நிதியுதவி பாசன விவசாயம் மேம்படுத்தல் 29 மாவட்டங்களில் 289.20 கோடியில் பணிகள் தொடங்கப்பட்டுள்ளது. 2016–2017 குடிமராமத்து திட்டப்பணி, 100 கோடியில் 1519 ஏரிகளில் பணி நிறைவு பெறும் நிலையில் உள்ளது. 2016–2017 நபார்டு திட்டத்தில், கடலூர் மாவட்டத்தில் நிரந்தர வெள்ளத்தடுப்பு பணி 140 கோடி, பணி முன்னேற்றத்தில் உள்ளது. 2016–2017 மாநில நதிநீர் இணைப்புத் திட்டம் 625.15 கோடியில் முதற்கட்டப் பணிகள் துவங்கப்பட்டுள்ளன. 2011 முதல் 2016 வரை 10295 கோடி அறிவிக்கப்பட்டுள்ள 242 பெரிய திட்டங்களும், 200 திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு ரூபாய் 7128.19 கோடியில் செலவிடப்பட்டுள்ளது. 42 திட்டங்கள் முன்னேற்றத்தில் உள்ளன. ஆகவே, புரட்சித்தலைவி அம்மா அவர்கள் இருந்த காலத்திலும் சரி, அம்மா மறைவிற்குப் பிறகும், இந்தத்துறை வேகமாக, துரிதமாக மக்களுக்கு நன்மை செய்கின்ற துறை என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன். புரட்சித்தலைவி அம்மாவினுடைய அரசு இன்றைய தினம் எல்லா துறைகளிலுமே சிறந்து விளங்கிக் கொண்டிருக்கின்றது. எந்த குறையும் கண்டுபிடிக்க முடியவில்லை. ஏதாவது ஒரு பொய்யை சொல்லி, வேண்டுமென்றே ஊடகங்களிலும், செய்தித் தாள்களிலும் அன்றாட செய்தியாக வரவழைத்துக் கொண்டிருக்கிறார்கள் எதிர்க்கட்சியைச் சேர்ந்த தலைவரும், அதனைச் சார்ந்தவ.ர்ளும். எந்த சதித்திட்டங்களை தீட்டினாலும், எந்த பொய் மூட்டையை அவிழ்த்து விட்டாலும், உண்மையை யாராலும் மறைக்கமுடியாது. ஏனென்றால், புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆருடைய வழியில் வந்து, புரட்சித்தலைவி அம்மாவால் கட்டிக் காத்த ஆட்சி மக்களால் போற்றப்படுகின்ற ஆட்சி என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். நம்முடைய மாவட்ட அமைச்சர் கொடுத்திருக்கின்றார், சிவகங்கயைச் சேர்ந்த திமுக முன்னாள் அமைச்சர் தா.கிருட்டிணன் நடுரோட்டில் வெட்டிக் கொல்லப்பட்டார். இப்படிப்பட்ட சம்பவங்களெல்லாம் உங்களுடைய ஆட்சியிலே அரங்கேறியிருக்கின்றது.

இன்றைக்கு சுகாதாரத்துறையிலே முதன்மையாக விளங்கிக் கொண்டிருக்கின்ற மாநிலம் தமிழ்நாடு. புரட்சித்தலைவி அம்மா எடுத்துவரும் தொடர்நடவடிக்கையால், சுகாதாரத்துறையில் இந்தியாவிலேயே தமிழ்நாடு முதன்மை மாநிலமாக மட்டுமல்லாமல், முன்னோடி மாநிலமாக திகழ்ந்து வருகிறது. புரட்சித்தலைவி அம்மா அவர்கள் தமிழ்நாடு முதலமைச்சராக இருந்தபொழுது, தமிழ்நாடு சுகாதாரத் திட்டம் மிக சிறப்பாக செயல்படுத்தப்பட்டு, அனைவருக்கும் மருத்துவ சேவை என்ற உயர்வான நிலையை அடைந்தது. மேலும், மக்கள் நல்வாழ்வுத் துறையின் சிறப்பான செயல்பாட்டினால், பேறுகாலத்தில் தமிழ்நாட்டில் குறைந்த இறப்பு விகிதம், இந்தியாவில் சராசரி அளவைவிட பாதியாக குறைக்கப்பட்டுள்ளது. அதேபோல தாய் இறப்பு விகிதம் குறைக்கப்பட்டு, இந்திய அளவில் முன்னணி மாநிலமாக திகழ்கிறது. மேலும், விபத்துகாய சிசிக்சை மையங்கள் மற்றும் உடல் உறுப்பு தானத்திலும் தமிழ்நாடு இந்தியாவிலேயே முதன்மை மாநிலமாக திகழ்கிறது. மக்கள் நல்வாழ்வுத்துறையின் இந்த சாதனை மத்திய அரசு மற்றும் உலக சுகாதார நிறுவனமும் வெகுவாக பாராட்டியுள்ளது. ஜப்பான் நாட்டு முகமை JICA மூலம் 1636கோடி ரூபாய் தமிழ்நாடு மக்கள் நல்வாழ்வுத்துறை நிதி ஒதுக்கீடு செய்யபட்டு பல்வேறு திட்டங்கள் தொடங்கப்பட்டிருக்கின்றன. தமிழ்நாடு மக்கள் நல்வாழ்வுத் துறையின் மிகச் சிறப்பான செயல்பாடுகளினால் முதன்மை மாநிலமாக விளங்கி வருகிறது. தமிழ்நாட்டில் மருத்துவமனை கட்டமைப்பு மேலும் வலுப்படுத்தும் நவீன உபகரணங்களும், மருத்துவர்களுக்கு பயிற்சி அளிக்கும் தமிழ்நாடு சுகாதாரத் திட்டத்திற்கு உலக வங்கிரூ.2685 கோடி வழங்கிட முதல் கட்ட ஒப்புதல் அளித்துள்ளது என்பதை பெருமையோடு குறிப்பிட விரும்புகிறேன். அது மட்டுமல்ல. இன்றைக்கு ஏழை, எளிய, சாதாரண மக்கள் நோய்வாய்ப்பட்டால் இருதய அறுவை சிகிச்சை, சிறுநீரக அறுவை சிகிச்சை போன்றவை செய்யவேண்டுமென்று சொன்னால், பல லட்சம் ரூபாய் செலவு செய்யவேண்டிய சூழ்நிலை இருக்கின்றது. அப்படிப்பட்ட ஏழை மக்களுக்கு உதவ வேண்டும் என்பதற்காக, அம்மாவினுடைய அரசு இன்றைக்கு இருதய அறுவை சிகிச்சை மதுரைஅரசு ராஜாஜி மருத்துவமனையிலே, ஒரு செருப்பு தைக்கும் தொழிலாளிக்கு செய்யப்பட்டு அவர் நலமோடு இருக்கின்றார். ஆகவே, இன்றைக்கு மருத்துவத்துறையிலே ஒரு மைல்கல்லை நாம் அடைந்திருக்கிறோம். இது ஒரு சாதனை. தனியார் மருத்துவமனையில்தான் இருதய அறுவை சிகிச்சை செய்யப்பட்டு வருகின்றது. ஆனால், இன்றைக்கு அரசு மருத்துவமனையிலும் மாண்புமிகு அம்மாவினுடைய அரசு எடுத்த நடவடிக்கையினால், மருத்துவர்களுக்கு ஆக்கமும், ஊக்கமும் கொடுத்ததன் விளைவாக, இன்றைக்கு ஏழை செருப்பு தொழிலாளி உயிரோடு

பாதுகாக்கப்பட்டிருக்கிறார் என்று சொன்னால், அம்மா அரசு எந்த அளவிற்கு மருத்துவ சேவை செய்து கொண்டிருக்கிறது என்பதை நாட்டு மக்கள் தெரியும்.

இந்த விழாவை சிறப்பாக ஏற்பாடு செய்த நல்ல உள்ளங்களுக்கு எனது மனமார்ந்த பாராட்டுகளை தெரிவித்துக் கொண்டு இந்த அரசு உங்களின் சேவகனாக தொடர்ந்து பணியாற்றும் என்பதை தெரிவித்துக் கொண்டு விடைபெறுகிறேன். நேற்றும் நமதே ! இன்றும் நமதே ! நாளையும் நமதே !
வாழ்க அண்ணா நாமம்! வளர்க புரட்சித் தலைவர் புகழ் ! தொடர்க மாண்புமிகு அம்மாவின் ஆட்சி! நன்றி! வணக்கம்!

## <u>சிவகங்கை மாவட்டத்திற்கான சிறப்பு அறிவிப்புகளை அறிவித்தார்கள்</u>

### பேருந்து நிலையம்

1. திருப்பத்தூர் பேரூராட்சியில் பொதுமக்கள் வசதிக்காக புதிய பேருந்து நிலையம் ஒன்று அமைக்கப்படும்.

### தெப்பக்குளம் சீரமைப்பு

2. காளையார்கோவில் மையப்பகுதியில் மக்களின் நீர் ஆதாரமாக அமைந்துள்ள வரலாற்றுச் சிறப்புமிக்க தெப்பக்குளத்தின் சுற்றுச்சுவர், படித்துறை, நீர்வரத்துக் கால்வாய் மற்றும் சுற்றுப்பாதை சீரமைக்கப்படும்.

### அரசு கலைக் கல்லூரி கலையரங்கம்

3. சிவகங்கை மன்னர் துரைசிங்கம் அரசு கலைக் கல்லூரி கலையரங்கம் மற்றும் சீரணி அரங்கம் புதுப்பிக்கப்படும். இந்தக் கல்லூரியைச் சுற்றிலும் சுற்றுச்சுவர் அமைக்கப்படும்.

### புறவழிச்சாலை

4. சிவகங்கை நகருக்கு 10.60 கி.மீ. நீளத்திற்கு புறவழிச்சாலை அமைக்கப்படும்.

### பாலங்கள்

5. பெரம்பலூர் – மானாமதுரை சாலையிலிருந்து வேலூர் செல்லும் சாலையில் கி.மீ 4/2–ல் ஒரு பாலம் கட்டப்படும்.

6. உருவட்டி – மேலவாய்க்கோட்டை சாலையில் கி.மீ 1 /2–ல் ஓர் உயர்மட்டப் பாலம் கட்டப்படும்.

7. கப்பலூர் – ஏம்பல் சாலையில் கி.மீ 5 / 10–ல் ஓர் உயர்மட்டப் பாலம் கட்டப்படும்.

8. சாந்தரசன்கோட்டை – சூரணம் சாலையில் கி.மீ 5 / 6–ல் ஓர் உயர்மட்டப் பாலம் கட்டப்படும்.

9. மாத்தூர் – முலைக்குளம் சாலையில் கி.மீ. 1/4–ல் ஒரு சிறு பாலம் கட்டப்படும்.

10. ஆண்டிச்சி ஊரணி – ஒட்டாணம் சாலையில் கி.மீ. 0 / 4–ல் ஒரு சிறு பாலம் கட்டப்படும்.

11. மல்லாக்கோட்டை– நைனாபட்டி சாலையில் கி.மீ. 3/2–ல் ஒரு சிறு பாலம் கட்டப்படும்.

12. திருப்பத்தூர் – ஆலங்குடி சாலையில் கி.மீ. 9 / 6–8–ல் ஓர் உயர்மட்டப் பாலம் கட்டப்படும்.

13. கண்ணங்குடி – கூக்குடி சாலை கி.மீ.2/8ல் விருசுழி ஆற்றின் குறுக்கே ஓர் உயர்மட்டப் பாலம் கட்டப்படும்.

**மருத்துவ வசதிகள்**

14. சிவகங்கை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு **சி. ஆர்ம். கருவி** மற்றும் **தாய்சேய் நலப்பிரிவிற்கு நவீன கருவிகள்** வழங்கப்படும். இங்கு **மூப்பியல் பிரிவு** ஏற்படுத்தப்படும்.

15. சிவகங்கை மாவட்டத்தில் **மருந்து கிடங்கு விரிவாக்கம்** செய்யப்படும்.

16. சிவகங்கை மாவட்டத்தில் பணியாற்றும் 275 கிராமப்புற சுகாதார செவிலியர்களுக்கு மருத்துவப் புள்ளி விபரங்களைப் பதிவு செய்திட **கையடக்கக் கணினிகள் (Tablets)** வழங்கப்படும்.

17. காரைக்குடி மாவட்ட அரசு தலைமை மருத்துவமனையில் **சி.டி.ஸ்கேன், டயாலிசிஸ், எண்டோஸ்கோப் உள்ளிட்ட அதிநவீன உபகரணங்கள்**

வழங்கப்படும். **விபத்து காய சிகிச்சை மையம் உள்ளிட்ட உட்கட்டமைப்பு வசதிகள்** ஏற்படுத்தப்படும்.

**அணைக்கட்டுகள் கட்டுதல்**

18. காரைக்குடி வட்டம், **குறுந்தம்பட்டு கிராமத்தில் உள்ள எஸ்.ஆர். பட்டிணம் கண்மாய் மற்றும் அதன் கீழ் உள்ள கண்மாய்களுக்குத் தண்ணீர் வழங்க மணிமுத்தாற்றின் குறுக்கே 7 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஓர் அணைக்கட்டு** கட்டப்படும்.

**தடுப்பணை கட்டுதல்**

19. சிங்கம்புணரி வட்டம், **காளாப்பூர் கிராமத்தில் பாலாற்றின் குறுக்கே ஒரு தடுப்பணை** கட்டப்படும்.

**படுகை அணை கட்டுதல்**

20. சிவகங்கை மாவட்டம், திருப்புவனம் வட்டம், கானூர் கால்வாய் மற்றும் பழையனூர் கால்வாய் மூலம் பாசனம் பெறும் கண்மாய்களுக்காக வைகை ஆற்றில் திருப்புவனம் அருகில் படுகை அணை கட்ட விரிவான ஆய்வு மேற்கொள்ளப்படும்.

**ஆற்றினைச் சீரமைத்தல்**

21. சருகனி ஆற்றின் குறுக்கே உள்ள அணைக்கட்டு மற்றும் ஆறுகளில் உள்ள மணல் திட்டுகளை அகற்றி இரு கரைகளையும் பலப்படுத்திச் சீரமைக்கும் திட்டத்திற்கு ஆய்வுப் பணிகள் மேற்கொள்ளப்படும்.

**மின் வசதிகள்**

22. சிவகங்கை மாவட்டத்தில் **கீழச்சீவல்பட்டியில் புதிய 33/11 கி.வோ.** துணை மின்நிலையம் ரூ.4.43 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்படும்.

23. சிவகங்கை மாவட்டம், தெக்கூர் 110/11 கி.வோ. துணை மின் நிலையத்தில் 16 எம்.வி.ஏ. திறனுடன் கூடிய புதிய மின்மாற்றி நிறுவப்படும்.

24. சிவகங்கை மாவட்டம், இடையமேலூரில் புதிய **110/22** கி.வோ. துணை மி**ன் நிலையம்** ரூபாய் **11.70** கோடி மதிப்பீட்டில் நிறுவப்படும்.

25. சிவகங்கை மாவட்டம், **மானாமதுரையிலுள்ள சாலை கிராமம் 110/22 கி.வோ துணை மின்நிலையத்தில் புதிய கட்டுப்பாட்டு அறை** அமைக்கப்படும்.

26. **சிவகங்கை மின்பகிர்மான வட்டத்தில்** புதியதாக **கணினி முறையில் மின்தடை பழுது நீக்கும் மையம் (Fuse Off Call Centre)** 18.20 லட்சம் மதிப்பீட்டில் நிறுவப்படும்.

27. சிவகங்கை மாவட்டம், **பொட்டப்பாளையம் 33/11 கி.வோ. துணை மின் நிலையத்தில் கூடுதலாக 8 எம்.வி.ஏ. திறனுடன் கூடிய புதிய மின்மாற்றி** நிறுவப்படும்.

**சிவகங்கை, இராமநாதபுரம், விருதுநகர் மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களில் உள்ள விவசாயிகளின் நீண்ட நாள் கோரிக்கையினை ஏற்று**

- இப்பகுதி உள்ள மானாவாரி நிலங்களில் வறட்சியைத் தாங்கி நன்கு வளர கூடிய, தைலம், சவுக்கு, மலைவேம்பு மற்றும் சூபாபுல் போன்ற கூழ் மரங்களை காகித உற்பத்திக்கு தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனம் விவசாயிகளிடமிருந்து கொள்முதல் செய்துவருகிறது.

- தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனம் சென்ற ஆண்டு டன் ஒன்றுக்கு ரூ.2700 வீதம் தைல கூழ்மரங்களை விவசாயிகளின் நிலத்தில் இருந்து அறுவடை செய்து கொள்முதல் செய்தது.

- கடந்த ஆண்டுகளில் ஏற்பட்ட கடும் வறட்சியை கருத்தில் கொண்டு, **1.12.2017 முதல் அறுவடை செய்யப்படும் தைல கூழ் மரங்களுக்கு டன் ஒன்றுக்கு ரூ.3750 வீதம் விவசாயிகளுக்கு வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.**

- **மேலும், இந்த ஆண்டு முதல்** தைல மரம் நடவு (சாகுபடி) செய்யும் விவசாயிகளுக்கு **குறைந்த பட்ச ஆதார விலையாக விவசாய நிலங்களிலிருந்து அறுவடை செய்யப்படும் கூழ் மரங்களுக்கு டன் ஒன்றுக்கு ரூ.4000ஆக நிர்ணயித்துள்ளது.**

- இவ்வாறு சாகுபடி செய்த தைல கூழ் மரங்களை **ஐந்து வருடங்களுக்கு பின்** தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனத்திற்கு விற்பனை செய்யும் போது, **இந்த குறைந்த பட்ச ஆதார விலையான ரூ.4000—மோ, அல்லது அறுவடை செய்யும்போது உள்ள சந்தை விலையோ, இவ்விரண்டில் எது அதிகமோ அந்த விலைக்கே விவசாய நிலங்களிலிருந்து கொள்முதல் செய்யப்படும்.**
- இத்திட்டம், மானாவாரி நிலங்கள் வைத்திருக்கும் விவசாயிகளுக்கு நிரந்திர வருவாய் ஈட்ட பெரிதும் உதவிகரமாக இருக்கும் என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட கடமைப்பட்டிருக்கிறேன்.

**வெளியீடு : — இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை—9**